**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 012923/எச்.1/2021** **நாள் :18 .11.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு, ஆகஸ்ட் 2021 – அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல் விநியோகம் செய்யப்படுவது குறித்து – செய்திக் குறிப்பு – வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

நடைபெற்று முடிந்த ஆகஸ்ட் 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் (Original Mark Certificates) / மதிப்பெண் பட்டியல் (Statement Of Marks) வழங்குவது தொடர்பான செய்திக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் விவரங்களை தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். இதனை பொதுமக்களும், தேர்வர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேட்டில் செய்தியாக வெளியிடுமாறும், தொலைக்காட்சி / வானொலியில் ஒளி / ஒலி பரப்புமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

‘இது விளம்பரம் அல்ல’ என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இணைப்பு:** செய்திக் குறிப்பு.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள்

– மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு, ஆகஸ்ட் 2021

## அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் ( Original Mark Certificates) வழங்குதல் குறித்த செய்திக்குறிப்பு

ஆகஸ்ட் 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வெழுதிய தேர்வர்கள் (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு உட்பட) தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை / மதிப்பெண் பட்டியல்களை **25.11.2021** ( வியாழக்கிழமை ) முதல், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம். மேலும், கூடுதல் விவரங்களை தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

**முக்கியக் குறிப்பு:**

1. மதிப்பெண் சான்றிதழ்களை / மதிப்பெண் பட்டியல்களைப் பெற்றுக் கொள்ள தேர்வு மையத்திற்கு வருகை தரும் தேர்வர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
2. தேர்வு மையத்தில் தேர்வர்கள் சமூக இடைவெளியினை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

தேதி: 18.11.2021.
இடம்: சென்னை– 600 006.

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு, ஆகஸ்ட் 2021

## அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் ( Original Mark Certificates) வழங்குதல் குறித்த செய்திக்குறிப்பு

ஆகஸ்ட் 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வெழுதிய தேர்வர்கள் (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு உட்பட) தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை / மதிப்பெண் பட்டியல்களை **25.11.2021** ( வியாழக்கிழமை) முதல், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய நடைமுறையில் (மொத்தம் 600 மதிப்பெண்கள்) தேர்வெழுதியவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல் வழங்கும் முறை**

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை முதலாம் ஆண்டு (600 மதிப்பெண்கள்) மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான (600 மதிப்பெண்கள்) மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificates) தனித்தனியே வழங்கப்படும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்விலோ / இரண்டாம் ஆண்டு தேர்விலோ அல்லது இரண்டு தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத தேர்வர்களுக்கு, அவர்கள் இரு தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்களை பதிவு செய்து அச்சிடப்பட்ட ஒரே மதிப்பெண் பட்டியலாக (Statement Of Marks) வழங்கப்படும். இம்மாணவர்கள் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற பின்னரே, அவர்களுக்கு மேற்காண் இரு தேர்வுகளுக்கான தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**பழைய நடைமுறையில் (மொத்தம் 1200 மதிப்பெண்கள்) +2 தேர்வெழுதியவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறை**

பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) நிரந்தர பதிவெண் (Permanent Register Number) கொண்டு தேர்வெழுதிய மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வர்கள், இதற்கு முந்தைய பருவங்களில் தேர்ச்சி பெறாத பாடங்களை, ஆகஸ்ட் 2021 துணைத் தேர்வில் எழுதி அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பின், அவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ்களும், முழுமையாக தேர்ச்சி பெறாதவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நிரந்தர பதிவெண் இல்லாமல் (மார்ச் 2016 பொதுத் தேர்விற்கு முன்னர்) மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுதிய தேர்வர்கள், தற்போது ஆகஸ்ட் 2021 பொதுத் தேர்வெழுதி இருப்பின், அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண்கள் மட்டும் பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**முக்கியக் குறிப்பு:**

1. மதிப்பெண் சான்றிதழ்களை / மதிப்பெண் பட்டியல்களைப் பெற்றுக் கொள்ள தேர்வு மையத்திற்கு வருகை தரும் தேர்வர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
2. தேர்வு மையத்தில் தேர்வர்கள் சமூக இடைவெளியினை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

தேதி: 18.11.2021.
இடம்: சென்னை– 600 006.